GOVERNMENT OF PUDUCHERRY
LABOUR DEPARTMENT
DIRECTORATE OF TRAINING

Industrial Training Institute

***

# பத்திரிகை செய்திக் குறிப்பு

புதுவை அரசு தொழிலாளர் துறை பயிற்சி இயக்குனரகம் மூலம் வருடாவருடம் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு தொழிற்பயிற்சி பிரிவுகளில் ஐடிஐ (ITI) மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒரு வருட மற்றும் இரண்டு வருட NCVT/SCVT பயிற்சி பிரிவுகளில் சேர்ந்து படிக்க கல்வியாண்டு 2024-25-க்கான ஆன்லைன் (ONLINE) விண்ணப்பங்கள் 03.06.2024 முதல் வரவேற்கப்படுகின்றன.

பயிற்சியில் சேர விரும்பும் மாணவ-மாணவியர்கள் https://www.centacpuducherry.in/ அல்லது https://labour.py.gov.in/ என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்க வேண்டும். சென்டாக் இணையதளத்தில் பதிவு செய்ய கட்டணம் ஏதும் செலுத்த தேவையில்லை.

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் அதற்கான தொழிற்பயிற்சி பிரிவுகளிலும், 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் அதற்குரிய தொழிற்பயிற்சி பிரிவுகளிலும் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் விண்ணப்பிக்கலாம். உடனடி வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய இந்த தொழிற்பயிற்சி பிரிவுகளில் சேருவதற்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேரும் அனைவருக்கும் பயிற்சியின்போது ஒவ்வொரு மாதமும் 1000 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படும். தகுதித்தேர்வு அடிப்படையில் ஒவ்வொரு பயிற்சி பிரிவிலும் ஒருவருக்கு கூடுதலாக மேலும் 1000 ரூபாய் ஊக்கத்தொகை அளிக்கப்படும். மேலும் பயிற்சியில் சேரும் அனைவருக்கும் மதிய உணவு, பாடப் புத்தகம், சீருடை ஆகியவை இலவசமாக வழங்கப்படும். புதுவையில் மேட்டுப்பாளையம், வம்பாகீரப்பாளையம், வில்லியனூர், பாகூர், நெட்டப்பாக்கம் ஆகிய இடங்களிலும் மற்றும் காரைக்கால், மாஹே, ஏனாம், ஆகிய பகுதிகளிலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு கம்ப்யூட்டர், எலக்ட்ரீசியன், சிவில், ஏசி மெக்கானிக், மோட்டார் வாகன மெக்கானிக், எலக்ட்ரானிக்ஸ், ஒயர்மேன், தையல் கலை, அழகு கலை, வெல்டர், டர்னர், டிரோன் டெக்னீஷியன், சோலார் டெக்னீஷியன், மின்சார வாகன மெக்கானிக், ஃபிட்டர், உணவு மற்றும் விருந்தோம்பல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ITI-ல் சேர்ந்து தேர்ச்சி பெறும் அனைவருக்கும் 100 சதவிகித வேலை வாய்ப்பு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதில் சிரமம் இருப்பின் மாணவ, மாணவிகள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்குச் சென்று கட்டணம் ஏதுமின்றி உதவி மையம் மூலமாக இலவசமாக விண்ணப்பிக்கலாம். பயிற்சி பற்றிய விபரங்கள் மற்றும் பயிற்சி பிரிவுகளின் தகவல்கள் அடங்கிய கையேடுகளை தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் தகவல்களுக்கு உதவி மைய அலைபேசி எண் 9003538089 –ல் தொடர்பு கொள்ளவும்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள மாணவ மாணவிகள் தொழிற்பயிற்சி பிரிவுகளில் விண்ணப்பித்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சென்டாக் இணையதளம் மூலம் பதிவு செய்ய கடைசி தேதி 30.06.2024.

பயிற்சி பிரிவு இயக்குனர்,
தொழிலாளர் துறை, புதுச்சேரி அரசு